**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.139/2019**

**PW12**

| | | |
|---|---|---|
| **Name** | : | ஜெயப்பிரகாஷ் |
| **Father's Name** | : | கந்தசாமி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | சென்னை |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.01.2026.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை , புளியந்தோப்புக்கு உட்பட்ட ஓட்டேரி காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 18.11.2017 அன்று சந்தவாசல் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன். சந்தவாசல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் விஜயகுமார் என்பவர் குற்ற எண். 472/2017 சட்டப்பிரிவு 294(b), 307 IPC ன் கீழ் வழக்கை பதிவு செய்து வைத்திருந்ததை 18.11.2017 ல் நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான ஆத்துவாம்பாடி சித்தேரி கொல்லைமேடு வாதியின் வீட்டிற்கு அருகே சென்றேன். அங்கு சம்பவ இடத்தை சாட்சிகள் வி.ஏ.ஓ அருண்பிரசாத், கிராம உதவியாளர் மோகன் ஆகியோர் முனனிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் , மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.10**. சம்பவ இடத்தில் ரத்தக்கரையுடன் கூடிய சிமெண்ட் காரை சிறிதளவும், சாதாரண சிமெண்ட் காரை சிறிதளவும் மேற்கண்ட அதே சாட்சிகளின் முன்பு மகசரில் கைப்பற்றினேன். பின்பு சாட்சிகள் ரேகா, வெங்கடேசன் , ராஜசேகர், மஞ்சுளா, முருகன் , சிவக்குமார் , லோகநாதன் , குமாரி மற்றும் வெங்கடேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இவ்வழக்கின் எதிரியான சிவராஜ் த.பெ நடராஜ் என்பவரை சுமார் 14.00 மணிக்கு ஆத்துவாம்பாடி தர்மலிங்கேஷ்வரர் கோயில் பஸ் ஸ்டாப்பிடம் கைது செய்தவதற்கான காரணத்தை எடுத்து கூறி முறைப்படி கைது செய்தேன். பின்பு எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண் அதே சாட்சிகளின் முன்பு பதிவு செய்தேன். பின்பு எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்ததின்படி எதிரி தன் வீட்டின் பின்புறம் மறைத்துவைத்திருந்த வேப்பமரக்கொம்பு ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை மேற்கண்ட அதே சாட்சிகளின் முன்பு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். பின்பு சாட்சி அருண்பிரசாத், மோகன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துடன்

நிலையம் ஆஜராகி நிலைய பாராவசம் ஒப்புவித்து ஆவணங்கள் தயார் செய்து இவ்வழக்கின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்பு இவ்வழக்கில் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேகர் த.பெ. பச்சையப்பன் என்பவர் சுமார் 19.00 மணிக்கு இறந்துவிட்டதாக மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 307 IPC ல் இருந்து 294(b), 302 ஆக பிரிவு மாற்றம்செய்து பிரிவு மாற்றல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த பிரிவு மாற்றல் அறிக்கை **அ.த.சா.ஆ.11**. பின்பு 19.11.2017 அன்று அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை சவக்கடங்கில் இறந்துபோன சேகர் என்பவரின் பிரேதத்தின் பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.12**. பின்பு இறப்பின் உண்மையான காரணங்களை அறியும்பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி அரசு மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் மகேந்திரன் என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். பின்பு இவ்வழக்கில் இறந்துபோன பிரேதத்தின் மீது காணப்பட்ட வெள்ளை நிற வேட்டி 1, கோடுபோட்ட சந்தன கலர் சட்டை 1 ஆகியவற்றை உதவி ஆய்வாளர் மகேந்திரன் என்னிடம் ஆஜர் செய்ததை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த வெள்ளை நிற வேட்டி 1 மற்றும் கோடுபோட்ட சந்தன கலர் சட்டை 1 ஆகும். அவை முறையே **அ.சா.பொ.4 மற்றும்** 5. பின்பு இவ்வழக்கில் சாட்சிகள் ரேகா, காவியா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கில் உடல் உள்ளுறுப்புகளை ஆய்வு செய்த வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வக அறிவியல் அலுவலர் அசோக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட 13.03.2018 தேதியிட்ட உயிரியல் அறிக்கை **அ.த.சா.ஆ.13.** அங்கிருந்த பெறப்பட்ட குருதி வடிநீரியல் அறிக்கை **அ.த.சா.ஆ.14**. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் நாகேந்திர குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்றிதழ் பெற்றேன். பின்பு இவ்வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளர் மகேந்திரன், உதவி ஆய்வாளர் விஜயகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு உதவி இயக்குநர் குற்ற தொடர்பு துறை அவர்களிடம் கருத்துரையை பெற்று எதிரியின் மீது 294 (b), 302 IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.